Q.C. 134

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | The Jail Test Part - I (a) Bharatiya Nyaya Sanhita, 2023 (Without Books) | 107 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Section 2 (21) defines
பிரிவு 2 (21) ____________ வரையறுக்கிறது

(A) immovable property
அசையா சொத்து

(B) good faith
நல்ல எண்ணம்

(C) movable property
அசையும் சொத்து

(D) women
பெண்கள்

2. Who has the power to decide whether multiple punishments run together or one after another?
பல தண்டனைகள் ஒரே நேரத்தில் அல்லது ஒன்றுக்கு பிறகு ஒன்று வழங்கப்படவேண்டுமா என்பதைக் தீர்மானிக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) Police
போலீசாருக்கு

(B) Accused
குற்றவாளிக்கு

(C) Court
நீதிமன்றத்திற்கு

(D) Victim
பாதிக்கப்பட்டவருக்கு

3. "Election" means an election for the purpose of selecting members of any
"தேர்தல் என்பது எந்த உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்காக நடத்தப்படும் ஒரு தேர்தலைக் குறிக்கிறது.

(A) legislative
சட்டமன்றம்

(B) municipal
நகராட்சி

(C) other public authority
பிற பொது அதிகாரம்

(D) all the above
மேலே உள்ள அனைத்தும்

4. Right of private defence of the body and of property was dealt by the section
உடல் மற்றும் சொத்துக்களின் தனிப்பட்ட பாதுகாப்பு உரிமையை ____________ பிரிவு கையாள்கிறது

(A) 35

(B) 22

(C) 13

(D) 37

5. If someone hides a criminal to help him escape, it is called
ஒரு குற்றவாளி தப்பிக்க உதவுவதற்காக அவரை மறைத்து வைத்தால், அது பின்வருமாறு அழைக்கப்படுகிறது:

(A) Forgery
மோசடி

(B) Abduction
கடத்தல்

(C) Harbouring offender
குற்றவாளிக்கு அடைக்கலம் கொடுத்தல்

(D) Theft
திருட்டு

6. What is the punishment if a public servant carelessly allows a prisoner to escape?
ஒரு பொது ஊழியர் அலட்சியமாக இருந்து அரசு கைதியைத் தப்பிக்க விடும் குற்றங்களுக்கு என்ன தண்டனை?

(A) death sentence
மரண தண்டனை

(B) life sentence
ஆயுள் தண்டனை

(C) simple imprisonment for a term of 3 years and fine
3 ஆண்டுகள் வரை எளிய சிறைத்தண்டனை மற்றும் அபராதம்

(D) less than 3 years simple imprisonment
3 ஆண்டுகளுக்கும் குறைவான எளிய சிறைத்தண்டனை

7. Which old legal term is no longer used in BNS?
BNS-இல் எந்த பழைய சட்டச் சொல் பயன்படுத்தப்படவில்லை?

(A) Accused
குற்றம் சாட்டப்பட்டவர்

(B) Offence
குற்றம்

(C) Juryman
நீதிபதி

(D) Evidence
ஆதாரம்

8. In BNS, the word 'injury' includes harm to
BNS-இல், 'காயம்' என்ற வார்த்தை எதற்கு தீங்கு விளைவிப்பதை உள்ளடக்கியது:

(A) Body only
உடல் மட்டும்

(B) Mind only
மனம் மட்டும்

(C) Body, mind, reputation, or property
உடல், மனம், நற்பெயர் அல்லது சொத்து

(D) Only reputation
நற்பெயர் மட்டும்

9. The word "Public" includes
"பொதுமக்கள்" என்ற வார்த்தை குறிப்பது

(A) Any class of public
எல்லா பிரிவு மக்களையும்

(B) Only the working class
பணிபுரிபவரை மட்டும்

(C) Government Servants only
அரசு ஊழியரை மட்டும்

(D) Only the ruling class
ஆட்சியில் உள்ளவரை மட்டும்

10. What is the punishment for a serious crime like murder?
கொலை போன்ற கடுமையான குற்றத்திற்கு கொடுக்கப்படும் தண்டனை என்ன?

(A) Community service
சமூக சேவை

(B) Life imprisonment or death
ஆயுள் தண்டனை அல்லது மரணம்

(C) Fine only
அபராதம் மட்டும்

(D) Warning
எச்சரிக்கை

11. Which section deals with public servant voluntarily allowing prisoner to escape?
எந்தப் பிரிவு, அரசு ஊழியர் தானாக முன்வந்து கைதியை தப்பிக்க அனுமதிப்பதைப் பற்றி விவரிக்கிறது?

(A) 107

(B) 122

(C) 135

(D) 156

12. What is "Solitary Confinement"?
"தனிமை சிறைவாசம்" என்றால் என்ன?

(A) Group jail time
குழு சிறைவாசம்

(B) Staying in jail with family
குடும்பத்துடன் சிறையில் தங்குதல்

(C) Keeping a prisoner alone
ஒரு கைதியை தனியாக வைத்திருத்தல்

(D) Giving free time
ஓய்வு நேரத்தை வழங்குதல்

13. Under what circumstances does the right of private defence of property extend to causing death?
எந்த சூழ்நிலையில் சொத்தை பொறுத்த தற்காப்பு உரிமை, மரணத்தை விளைவிக்கும் அளவுக்கு நீடிக்கும்

(A) Robbery
கொள்ளை

(B) House breaking by night
இரவில் கன்னமிடுதல்

(C) Mischief
தீயிட்டு அழிம்பு செய்தல்

(D) All the above
மேற்கூறிய அனைத்தும்

14. Which age group is completely exempted from criminal liability?
எந்த வயதினருக்கு குற்றவியல் பொறுப்பிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்படுகிறது?

(A) Below 7 years
7 வயதுக்குக் கீழே

(B) Below 9 years
9 வயதுக்குக் கீழே

(C) Below 8 years
8 வயதுக்குக் கீழே

(D) Below 10 years
10 வயதுக்குக் கீழே

15. Which of the following is true?
பின்வருவனவற்றில் எது சரியானது?

(A) BNS contains 20 Chapters and 358 Sections
BNS 20 அத்தியாயங்களையும் 358 பிரிவுகளையும் கொண்டுள்ளது

(B) BNS contains 23 Chapters and 356 Sections
BNS 23 அத்தியாயங்களையும் 356 பிரிவுகளையும் கொண்டுள்ளது

(C) BNS contains 21 Chapters and 358 Sections
BNS 21 அத்தியாயங்களையும் 358 பிரிவுகளையும் கொண்டுள்ளது

(D) BNS contains 20 Chapters and 352 Sections
BNS 20 அத்தியாயங்களையும் 352 பிரிவுகளையும் கொண்டுள்ளது

16. Nothing is an offence if done by a person of unsound mind who:
மனநிலை சரியில்லாத ஒருவர் கீழ்க்கண்ட நிலையில் செயல்களைச் செய்தால் அது குற்றமாகாது

(A) Acts with planning
திட்டமிடலுடன் செயல்படுதல்

(B) Has partial memory loss
பகுதியளவு நினைவாற்றல் இழப்பு

(C) Is incapable of knowing the nature of the act
செயலின் தன்மையை அறிய இயலாது

(D) Was under peer pressure
சகாக்களின் அழுத்தத்தின் கீழ் இருத்தல்

17. Which of the following is protected under the right of private defence?
பின்வருவனவற்றில் எது தற்காப்பு உரிமையின் கீழ் பாதுகாக்கப்படுகிறது ?

(A) Defence of honour
கௌரவப் பாதுகாப்பு

(B) Defence of self and property
சுய மற்றும் சொத்துப் பாதுகாப்பு

(C) Defence of religion
மதப் பாதுகாப்பு

(D) Defence of friends only
நண்பர்களின் பாதுகாப்பு மட்டும்

18. The word 'Court of Justice' denotes
'நீதிமன்றம்' என்ற சொல் ____________ குறிக்கிறது

(A) A single Judge only
ஒரு நீதிபதி மட்டும்

(B) A body of Judges only
நீதிபதிகளது குழு மட்டும்

(C) A Court building
ஒரு நீதிமன்ற கட்டிடம்

(D) A Single or a Body of Judges
ஒரு ஒற்றை அல்லது நீதிபதிகள் குழு

19. The BNS shall be applicable to
BNS சட்டம் பொருந்துவது

(A) The whole of India
இந்தியா முழுவதும்

(B) The whole of India, except Jammu and Kashmir
ஜம்மு காஷ்மீர் தவிர இந்தியா முழுவதும்

(C) The whole of India except Punjab
பஞ்சாப் தவிர இந்தியா முழுவதும்

(D) The whole of India, except West Bengal
மேற்கு வங்கம் தவிர இந்தியா முழுவதும்

20. Which is newly added in the BNS?
BNS -ல் புதிதாக சேர்க்கப்பட்டது எது?

(A) Human being
மனிதன்

(B) Transgender
திருநங்கை

(C) Person
நபர்

(D) Public
பொதுமக்கள்

21. If a person does something by mistake but with good belief, is he guilty?
ஒருவர் தவறுதலாக ஏதாவது செய்தால், ஆனால் நல்ல நம்பிக்கையுடன் செய்தால், அவர் குற்றவாளியா?

(A) Yes
ஆம்

(B) No
இல்லை

(C) Sometimes
சில நேரங்களில்

(D) Only if police says
காவல்துறை கூறினால் மட்டுமே

22. If a person does not pay the fine, how long can the court send him to jail? It should not be more than ____________ of the maximum jail term for that offence.
ஒருவர் அபராதம் செலுத்தவில்லை என்றால், நீதிமன்றம் அவரை எவ்வளவு காலம் சிறையில் அடைக்க முடியும்? அந்தக் குற்றத்திற்கான அதிகபட்ச சிறைத் தண்டனையை விட அது ____________ க்கு மேல் இருக்கக்கூடாது

(A) 1/3

(B) 1/2

(C) 1/4

(D) 1/5

23. What is commutation of sentence?
தண்டனை மாற்றியமைத்தல் என்பது

(A) Reduction
குறைத்தல்

(B) Modification
தண்டனையின் தன்மையை மாற்றுதல்

(C) Acquittal
விடுதலை

(D) Merger
ஒருங்கிணைத்தல்

24. What is the punishment for giving false evidence in court?
நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளித்தால் என்ன தண்டனை?

(A) 2 years
2 ஆண்டுகள்

(B) 5 years
5 ஆண்டுகள்

(C) 7 years
7 ஆண்டுகள்

(D) 10 years
10 ஆண்டுகள்

25. How many people must agree to do something illegal for it to be a criminal conspiracy?
சட்டவிரோதமான ஒன்றைச் செய்வது குற்றவியல் சதியாக மாற எத்தனை பேர் ஒப்புக்கொள்ள வேண்டும்?

(A) One person
ஒரு நபர்

(B) Group of ten persons
பத்து பேர் கொண்ட குழு

(C) At least five persons
குறைந்தது ஐந்து நபர்கள்

(D) Two or more persons
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள்

26. Which chapter deals Criminal Conspiracy?
குற்றவியல் சதித்திட்டத்தைப் பற்றி எந்த அத்தியாயம் கூறுகிறது?

(A) II
(B) V
(C) IV
(D) X

27. What does 'concurrent sentence' mean?
'concurrent sentence' (ஒரே நேரத்தில் செயல்படும் தண்டனை) என்பது என்ன அர்த்தம்?

(A) Sentences run one after another
தண்டனைகள் ஒன்று பிறகு ஒன்றாக வழங்கப்படும்

(B) All sentences are cancelled
அனைத்து தண்டனைகளும் ரத்து செய்யப்படும்

(C) Sentences run at the same time
தண்டனைகள் ஒரே நேரத்தில் நடைமுறையில் வரும்

(D) Sentence is doubled
தண்டனை இரட்டிப்பு செய்யப்படும்

28. Who decides whether the imprisonment will be simple or rigorous?
சிறைத்தண்டனை எளிதானதா அல்லது கடினமா என்பதை யார் தீர்மானிக்கிறார்?

(A) Police
போலீசார்

(B) Judge
நீதிபதி

(C) Public
பொதுமக்கள்

(D) Jail officer
சிறை அதிகாரி

29. What happens if a person does not pay the fine given by the court?
ஒருவன் நீதிமன்றம் விதித்த அபராதத்தை செலுத்தவில்லை என்றால் என்ன நடக்கும்?

(A) He may be sent to jail
அவனை சிறையில் அடைக்கலாம்

(B) He will be forgiven
அவன் மன்னிக்கப்படுவான்

(C) He can pay later anytime
அவன் எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம்

(D) He will be given more fine
அவனுக்கு மேலும் அபராதம் விதிக்கப்படும்

30. Public servant in judicial proceeding corruptly making report, etc., contrary to law ____________ dealt by the section
நீதித்துறை நடவடிக்கைகளில் பொது ஊழியர் சட்டத்திற்கு முரணான அறிக்கை போன்றவற்றை நெறிக்கேடான முறையில் உருவாக்குதல் - விளக்கும் பிரிவு

(A) 263
(B) 162
(C) 234
(D) 257

31. A citizen of India commits a crime in another country. Can he be punished under BNS?
இந்திய நாட்டுவாசி மற்றொரு நாட்டில் குற்றம் செய்தால், அவருக்கு BNS படி தண்டனை கிடைக்குமா?

(A) No
கிடையாது

(B) Only if foreign police acknowledge it
வெளிநாட்டு போலீசார் ஒப்புக்கொண்டால் மட்டுமே

(C) Only if victim is Indian
பாதிக்கப்பட்டவர் இந்தியர் என்றால் மட்டுமே

(D) Yes, if Indian law allows agree
ஆமாம், இந்தியச் சட்டம் அனுமதித்தால்

32. Which chapter deals with abetment
எந்த அத்தியாயம் உடந்தையாயிருத்தல் பற்றி விவரிக்கிறது

(A) III
(B) VI
(C) IV
(D) XI

33. In BNS what is the term used for 'Any Community'?
BNS சட்டத்தில் 'சமுதாயம்' என்பதற்குப் பயன்படுத்தப்படும் சொல் என்ன?

(A) Private
தனியார்

(B) Public
பொது

(C) Company
நிறுவனம்

(D) Society
சமூகம்

34. How many types of punishment in BNS Act?
BNS சட்டத்தில் எத்தனை வகையான தண்டனைகள் உள்ளன?

(A) 6

(B) 15

(C) 13

(D) 5

35. A map intended to be used as an evidence is a
சாட்சியாக பயன்படுத்தப்பட வேண்டிய வரைபடம் ஒரு

(A) File
கோப்பு

(B) Document
ஆவணம்

(C) Deed
பத்திரம்

(D) Data
தகவல்

36. The essential ingredients of crime are
குற்றத்தின் முக்கிய கூறுகள்

(A) Motive, mens rea and actus reus
உள்நோக்கம், குற்றமனம், குற்றச்செயல்

(B) Motive, intention and knowledge
உள்நோக்கம், எண்ணம், அறிவு

(C) Mens rea and actus reus
குற்றமனம், குற்றச்செயல்

(D) Knowledge, intention and action
அறிவு, எண்ணம், நடவடிக்கை

37. Which section deals with voluntary intoxication?
எந்தப் பிரிவு தன்னார்வ போதையைக் கையாள்கிறது

(A) 24

(B) 23

(C) 26

(D) 30

38. BNS came into force on
BNS __________ அமலுக்கு வந்தது

(A) 01 July 2024
01 ஜூலை 2024

(B) 01 March 2024
01 மார்ச் 2024

(C) 01 April 2024
01 ஏப்ரல் 2024

(D) 01 Jan. 2024
01 ஜனவரி 2024

39. While calculating part of a punishment, life imprisonment is counted as how many years (unless stated otherwise)?
தண்டனையின் ஒரு பகுதியைக் கணக்கிடும்போது, ஆயுள் தண்டனை எத்தனை ஆண்டுகள் (வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால்) என்று கணக்கிடப்படுகிறது?

(A) 10 years
10 ஆண்டுகள்

(B) 14 years
14 ஆண்டுகள்

(C) 25 years
25 ஆண்டுகள்

(D) 20 years
20 ஆண்டுகள்

40. When a person is already in jail for one offence, and gets another sentence, when will the second sentence start (if not said otherwise)?
ஒரு நபர் ஏற்கனவே ஒரு குற்றத்திற்காக சிறையில் இருந்து, மற்றொரு தண்டனையைப் பெற்றால், இரண்டாவது தண்டனை எப்போது தொடங்கும் (வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால்)?

(A) Immediately
உடனடியாக

(B) After the first sentence ends
முதல் தண்டனை முடிந்த பிறகு

(C) Before the first sentence ends
முதல் தண்டனை முடிவதற்கு முன்

(D) After 5 years
5 ஆண்டுகளுக்குப் பிறகு

41. Which section deals with a abetment of a thing
ஒரு விஷயத்தைத் தூண்டுவதை விளக்கும் பிரிவு

(A) 32

(B) 45

(C) 40

(D) 57

42. Which of the following offences under IPC has been altered in the BNS?
ஐபிசியின் கீழ் பின்வரும் எந்த குற்றங்கள் பிஎன்எஸ்-ல் மாற்றப்பட்டுள்ளன?

(A) Sedition
தேசத்துரோகம்

(B) Rape
கற்பழிப்பு

(C) Theft
திருட்டு

(D) Murder
கொலை

43. The maximum imprisonment for destruction of document or electronic record to prevent its production as evidence is ___________ years
ஆவணம் அல்லது மின்னணு பதிவை அழித்து, அதை ஆதாரமாக தயாரிப்பதைத் தடுப்பதற்கான அதிகபட்ச சிறைத்தண்டனை ___________ ஆண்டுகள் ஆகும்.

(A) 3
(B) 5
(C) 10
(D) 7

44. Gender represents
பாலினம் என்பது இவர்களை குறிக்கிறது

(A) Male
ஆண்
(B) Female
பெண்
(C) Transgender
திருநங்கை
(D) All the above
மேலே உள்ள அனைத்தும்

45. Which section deals with the resistance or obstruction to lawful apprehension of another person?
எந்த விதி எவரையேனும் சட்டபூர்வமாகக் கைது செய்வதை எதிர்த்தல் அல்லது தடுத்தலை விளக்குகிறது

(A) 234
(B) 250
(C) 263
(D) 276

46. A person acting under a mistake of fact in good faith is
நல்லெண்ணத்தில் ஒருவர் தவறுசெய்யும் போது அவர் உண்மைத் தவறு செய்ததன் கீழ் நல்லெண்ணத்தில் செயல்படும் ஒருவர்

(A) Guilty
குற்றவாளி
(B) Not guilty
குற்றவாளி அல்ல
(C) Punished
தண்டிக்கப்பட வேண்டியவர்
(D) Suspended
இடைநீக்கம் செய்யப்பட்டார்

47. A 'Special Law is a law applicable to
'சிறப்புச் சட்டம்' என்பது எதற்குப் பொருந்தக்கூடியது

(A) A particular part of India

இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதி

(B) A particular part of a State in India
இந்தியாவில் உள்ள ஒரு மாநிலத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதி

(C) A particular subject
ஒரு குறிப்பிட்ட பொருள்

(D) A particular Government
ஒரு குறிப்பிட்ட அரசு

48. Which section defines Counterfeit?
எந்தப் பிரிவு கள்ளநோட்டை வரையறுக்கிறது?

(A) 2(6)
(B) 2(11)
(C) 2(14)
(D) 2(4)

49. Which of the following acts is protected under necessity?
பின்வரும் செயல்களில் எது அவசியத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறது?

(A) Act to avoid public embarrassment

பொது சங்கடத்தைத் தவிர்ப்பதற்கான செயல்

(B) Act to save life or property in emergency
அவசரகாலத்தில் உயிர் அல்லது சொத்தை காப்பாற்றுவதற்கான செயல்

(C) Act done during religious rituals
மத சடங்குகளின் போது செய்யப்படும் செயல்

(D) Act to prevent arrest
கைது செய்வதைத் தடுப்பதற்கான செயல்

50. An act done by a person under intoxication is excused if
போதையில் ஒருவர் செய்த எவ்வித செயலுக்கு விலக்கு அளிக்கப்படும்:

(A) Intoxication was involuntary
போதை தன்னிச்சையாக இருந்தால்

(B) Person drank by choice
நபர் விருப்பப்படி குடித்தார்

(C) Person drinks daily
நபர் தினமும் குடித்தார்

(D) Person was celebrating
நபர் கொண்டாட்டமாக செய்தல்

51. Which section deals with the abetment of offence punishable with death or imprisonment for life?
மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கத்தக்க குற்றத்தைத் தூண்டுவது பற்றி எந்தப் பிரிவு கூறுகிறது?

(A) 26
(B) 49
(C) 55
(D) 60

52. "Fraudulently" means an act done:
"மோசடியாக" என்பது பின்வரும் செயல்களைக் குறிக்கிறது:

(A) Without knowledge
அறிவு இல்லாமல்
(B) With intent to defraud
மோசடி செய்யும் நோக்கத்துடன்
(C) For financial gain only
நிதி ஆதாயத்திற்காக மட்டும்
(D) In public interest
பொது நலனுக்காக

53. 'Good faith" under BNS requires:
BNS இன் கீழ் "நல்ல நம்பிக்கைக்கு" தேவைப்படுவது:

(A) Honesty only
நேர்மை மட்டும்
(B) Due care and attention
உரிய கவனிப்பு மற்றும் கவனம்
(C) Ignorance of facts
உண்மைகளை அறியாமை
(D) Official authority
அதிகாரப்பூர்வ அதிகாரம்

54. 'Act' come under section
'செயல்', விளக்கும் பிரிவு:

(A) 2(6)
(B) 2(10)
(C) 2(21)
(D) 2(1)

55. Which of the following is NOT a type of punishment under BNS?
பின்வருவனவற்றில் எது BNS இன் கீழ் தண்டனை வகை அல்ல?

(A) Deportation
நாடுகடத்துதல்
(B) Death
மரணம்
(C) Life imprisonment
ஆயுள் தண்டனை
(D) Forfeiture of property
சொத்து பறிமுதல்

56. The term "injury" in BNS includes:
BNS இல் "காயம்" என்ற சொல் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

(A) Only physical harm
உடல் ரீதியான தீங்கு மட்டுமே

(B) Only mental trauma
மன அதிர்ச்சி மட்டுமே

(C) Harm to property alone
சொத்துக்கு மட்டும் தீங்கு

(D) Harm to body, mind, reputation, or property
உடல், மனம், நற்பெயர் அல்லது சொத்துக்கு தீங்கு

57. A person is said to have "reason to believe" something if:
ஒரு நபர் எதையாவது "நம்புவதற்கு காரணம்" இருப்பதாகக் கூறப்பட்டால்

(A) He has imaginary doubts
அவருக்கு கற்பனையான சந்தேகங்கள் உள்ளன

(B) He acts without thinking
அவர் சிந்திக்காமல் செயல்படுகிறார்

(C) He has sufficient cause based on facts
உண்மைகளின் அடிப்படையில் அவருக்கு போதுமான காரணம் உள்ளது

(D) He relies only on suspicion
அவர் சந்தேகத்தை மட்டுமே நம்பியுள்ளார்

58. What is meant by "voluntarily" under BNS?
BNS-இன் கீழ் "தானாக முன்வந்து" என்றால் என்ன?

(A) Under pressure from another
இன்னொருவரின் அழுத்தத்தின் கீழ்

(B) Without any intent
எந்த நோக்கமும் இல்லாமல்

(C) Willingly, with knowledge of consequences
விருப்பத்துடன், விளைவுகளைப் பற்றிய அறிவுடன்

(D) By accident
தற்செயலாக

59. Sec ____________ describes property in possession of wife, clerk or servant
____________ பிரிவு மனைவி, எழுத்தர் அல்லது வேலைக்காரரின் உடைமையில் உள்ள சொத்தை விவரிக்கிறது

(A) 3(3)
(B) 2(2)
(C) 3(10)
(D) 2(6)

60. When did the BNS receive the president's assent?
BNS எப்போது ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றது?

(A) October 3, 2023
அக்டோபர் 3, 2023
(B) December 25, 2023
டிசம்பர் 25, 2023
(C) December 25, 2024
டிசம்பர் 25, 2024
(D) October 7, 2024
அக்டோபர் 7, 2024

61. What does the BNS introduce as a new offence?
புதிய குற்றமாக BNS எதை அறிமுகப்படுத்துகிறது?

(A) Homosexuality
ஓரினச்சேர்க்கை
(B) Organised crime
ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம்
(C) Sedition
தேசத்துரோகம்
(D) Terrorism
பயங்கரவாதம்

62. What happens if a person commits a crime while intoxicated against his will?
ஒருவர் கட்டாயமாக (தன்னிடமில்லை) மதுவில் இருந்தபோது குற்றம் செய்தால் என்ன?

(A) He will be punished
தண்டிக்கப்படுவார்
(B) He is not responsible if he had no control or understanding
அவருக்கு கட்டுப்பாடு அல்லது புரிதல் இல்லையென்றால் அவர் பொறுப்பல்ல
(C) He Will be fined only
அபராதம் மட்டும் விதிக்கப்படும்
(D) He will be jailed without trial
விசாரணையில்லாமல் சிறைக்கு அனுப்பப்படும்

63. When is a person of unsound mind not published under law?
மனநிலை சரியில்லாத நபர் சட்டப்படி தண்டிக்கப்பட மாட்டார், எப்போது?

(A) When he is poor
அவர் வறியவராக இருந்தால்

(B) When he acts under orders
அவர் பிறரின் கட்டளைக்கு கீழ் செயல்பட்டால்

(C) When he does not know what he is doing is wrong
அவர் தான் என்ன செய்கிறார் என்பது அவருக்குத் தெரியவில்லையெனில்

(D) When he agrees to the act
அவர் ஒப்புக்கொண்டால்

64. Can the court still ask for the fine after the jail time for default is over?
சிறைத்தண்டனை முடிந்த பிறகும் நீதிமன்றம் அபராதத்தை வசூலிக்க முடியுமா?

(A) No
முடியாது

(B) Only for small fines
சிறிய அபராதங்களுக்கு மட்டுமே

(C) Only if police request
போலீசார் கேட்டால்தான் முடியும்

(D) Yes
ஆமாம்

65. What is an 'offence' under the BNS?
BNS அடிப்படையில் 'குற்றம்' என்பது என்ன?

(A) A mistake done unknowingly
அறியாமையால் செய்த தவறு

(B) Any act punishable under the BNS or any other law
BNS அல்லது வேறு எந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படும் செயல்கள்

(C) A wrong act done in school
பள்ளியில் நடந்த தவறான செயல்

(D) A family argument
குடும்ப வாதம்

66. Can a person be punished in India for an offence committed outside India?
இந்தியாவிற்கு வெளியே செய்த குற்றத்திற்கு இந்தியாவில் தண்டனை வழங்க முடியுமா?

(A) Yes, in special cases under Indian law
ஆமாம், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் இந்தியச் சட்டப்படி

(B) No, only foreign law applies
முடியாது, வெளிநாட்டு சட்டம் தான் பொருந்தும்

(C) Only if done by a foreigner
வெளிநாட்டு நபர் செய்தால் மட்டுமே

(D) Only for murder
கொலைக்கு மட்டுமே

67. What is 'rigorous imprisonment'?
"கடின சிறைத்தண்டனை" என்றால் என்ன?

(A) Jail without food
உணவில்லாத சிறை

(B) House arrest
வீட்டில் காவல்

(C) Jail with no rules
விதிமீறல்களுடன் சிறை

(D) Jail with hard labour
கடின உழைப்புடன் சிறை

68. Sec 2 (6) defines
பிரிவு 2(6) வரையறுப்பது

(A) Man
மனிதன்

(B) Life
வாழ்க்கை

(C) Death
இறப்பு

(D) Children
குழந்தைகள்

69. What is the punishment for making a false document (forgery)?
தவறான ஆவணம் தயாரிப்பதற்கு (மோசடி) என்ன தண்டனை?

(A) 1 year
1 வருடம்

(B) 3 years
3 ஆண்டுகள்

(C) 5 years
5 ஆண்டுகள்

(D) 7 years
7 ஆண்டுகள்

70. Which section deals with accident in doing a lawful act?
சட்டப்பூர்வமான செயலைச் செய்வதில் ஏற்படும் விபத்துகளைப் பற்றி எந்தப் பிரிவு கூறுகிறது?

(A) 18
(B) 25
(C) 13
(D) 21

71. What does BNS use instead of the old word 'complainant'?
'புகார் அளிப்பவர்' என்ற பழைய வார்த்தைக்குப் பதிலாக BNS என்ன பயன்படுத்துகிறது?

(A) Informant
தகவல் அளிப்பவர்
(B) Victim
பாதிக்கப்பட்டவர்
(C) Witness
சாட்சி
(D) Accused
குற்றம் சாட்டப்பட்டவர்

72. Anything prohibited by law is
சட்டத்தால் தடைசெய்யப்பட்ட எதுவும்

(A) Harm
தீங்கு
(B) Legal
சட்டப்பூர்வமானது
(C) Illegal
சட்டவிரோதமானது
(D) Contrary
முரண்பாடானது

73. What is 'Punishment' under law?
சட்டத்தின் கீழ் 'தண்டனை' என்றால் என்ன?

(A) Reward for good work
நல்ல வேலைக்கான வெகுமதி
(B) Result of a moral mistake
ஒரு தார்மீகத் தவறின் விளைவு
(C) Legal consequence of a crime
ஒரு குற்றத்தின் சட்ட விளைவு
(D) Advice from police
காவல் துறையினரின் ஆலோசனை

74. The punishment for intentionally giving false evidence is imprisonment for
வேண்டுமென்றே பொய் சாட்சியம் அளிப்பதற்கான தண்டனை காலம்

(A) Up to 5 years
5 ஆண்டுகள் வரை
(B) Up to 7 years
7 ஆண்டுகள் வரை
(C) Up to 3 years
3 ஆண்டுகள் வரை
(D) Fine alone
அபராதம் மட்டும்

75. BNS permits forfeiture of property as punishment in
BNS தண்டனையாக எதற்கு சொத்துக்களை பறிமுதல் செய்ய அனுமதிக்கிறது

(A) Theft cases only
திருட்டு வழக்குகள் மட்டும்

(B) All criminal offences
அனைத்து குற்றவியல் குற்றங்கள்

(C) Family disputes
குடும்ப தகராறுகள்

(D) Cases specified under law
சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள்

76. An act done under compulsion of threat (duress) may be excused if
கட்டாய அச்சுறுத்தலின் (வற்புறுத்தலின்) கீழ் செய்யப்படும் ஒரு செயலுக்கு எப்போது மன்னிப்பு வழங்கப்படலாம்:

(A) The threat is not immediate
அச்சுறுத்தல் உடனடியாக இல்லை

(B) The act involves murder
இந்தச் செயல் கொலையை உள்ளடக்கியது

(C) The threat involves instant death and is real
அச்சுறுத்தல் உடனடி மரணத்தை உள்ளடக்கியது மற்றும் அது உண்மையானது

(D) The person acted with hatred
நபர் வெறுப்புடன் செயல்பட்டார்

77. Which section deals the harbouring of escaped prisoner?
தப்பியோடிய கைதியை அடைக்கலம் கொடுப்பது பற்றி எந்தப் பிரிவு கூறுகிறது?

(A) 138 (B) 212
(C) 210 (D) 158

78. If a person who is in India, abets the commission of an offence in a foreign country, then it would be treated as an offence committed in
இந்தியாவில் இருக்கும் ஒருவர், வெளிநாட்டில் ஒரு குற்றத்தைச் செய்யத் தூண்டினால், அவர் கீழ்க்கண்ட இடத்தில் குற்றம் புரிந்தவராகவே கருதப்படுவார்

(A) India
இந்தியா

(B) Foreign Country
வெளிநாட்டு நாட்டில்

(C) NRI
என்.ஆர்.ஐ

(D) International Boundary
சர்வதேச எல்லையில்

79. The word 'Man' denotes
'மனிதன்' என்ற சொல் ____________ குறிக்கிறது

(A) A male human being of any age
எந்த வயதிலும் ஒரு ஆண் நபர்

(B) Common mankind
பொதுவான மனித இனம்

(C) Adult male human beings only
வயது வந்த ஆண் மனிதர்கள் மட்டும்

(D) A male person with well-built strong body
நன்கு கட்டமைக்கப்பட்ட வலுவான உடலைக் கொண்ட ஒரு ஆண் நபர்

80. A sentence of imprisonment can be:
சிறைத் தண்டனை என்பது எவ்வாறு இருக்க முடியும்?

(A) Only rigorous
கடின உழைப்புடன் மட்டுமே

(B) Only simple
எளிதானதாக மட்டுமே

(C) Either rigorous or simple or both
கடினமாகவோ, எளிதாகவோ, இரண்டாகவோ இருக்க முடியும்

(D) Decided by police
போலீசாரால் தீர்மானிக்கப்படும்

81. If a person drinks by choice and commits a crime, can he claim protection under law?
ஒருவர் சுயமாக குடித்து குற்றம் செய்தால், அவர் சட்டத்தில் பாதுகாப்பு பெறமுடியுமா?

(A) Yes
ஆமாம்

(B) No
இல்லை

(C) Only if victim forgives
பாதிக்கப்பட்டவர் மன்னித்தால் மட்டுமே

(D) Only if he is a first-time offender
அவர் முதன்முறையாக குற்றம் செய்தால் மட்டுமே

82. Section 61 describes
பிரிவு 61 விவரிப்பது

(A) Criminal conspiracy
குற்றமுறு சதி

(B) Abetment
தூண்டுதல்

(C) Man
மனிதன்

(D) Life
வாழ்க்கை

83. Which chapter is included in BNS
BNS இல் எந்த அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளது ?

(A) Offences against Children
குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்

(B) Offences against Women
பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

(C) Neither (A) nor (B)
(A) அல்லது (B) அல்ல

(D) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

84. Which department enacted BNS?
எந்தத் துறை BNS -ஐ இயற்றியது ?

(A) Ministry of Home Affairs
உள்துறை அமைச்சகம்

(B) Ministry of Law and Justice
சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

(C) Department of Personnel and Training
பணியாளர் மற்றும் பயிற்சித் துறை

(D) Ministry of Defence
பாதுகாப்பு அமைச்சகம்

85. The first FIR under the BNS was registered in which city?
BNS இன் கீழ் முதல் FIR எந்த நகரத்தில் பதிவு செய்யப்பட்டது ?

(A) Hyderabad
ஹைதராபாத்

(B) Mumbai
மும்பை

(C) Delhi
டெல்லி

(D) Chennai
சென்னை

86. Nothing is an offence if it is done by a child under the age of
எந்தக் குற்றமும் கீழ்க்கண்ட வயதுக்குட்பட்ட குழந்தையால் செய்யப்பட்டால் அது குற்றமாகாது

(A) 12 years
12 வயது

(B) 10 years
10 வயது

(C) 8 years
8 வயது

(D) 7 years
7 வயது

87. Government means
அரசு என்பது

(A) State Government
மாநில அரசு

(B) Central Government
மத்திய அரசு

(C) Both (A) and (B)
(A) மற்றும் (B) இரண்டும்

(D) Either (A) or (B)
(A) அல்லது (B)

88. According to Sec 2 (16), judge is a person who has the authority to give
பிரிவு 2 (16) இன் படி, நீதிபதி என்பவர் கீழ்க்கண்டவற்றை வழங்க அதிகாரம் பெற்ற ஒரு நபர் ஆவார்.

(A) Judgment
தீர்ப்பு

(B) Fine
அபராதம்

(C) Imprisonment
சிறைத்தண்டனை

(D) All the above
மேற்கூறிய அனைத்தும்

89. What is the maximum jail time for not paying a fine?
அபராதம் செலுத்தாதத்தற்கான அதிகபட்ச சிறைதண்டனை என்ன?

(A) Same as the full sentence

முழு தண்டனை காலம்

(B) As court decides, not more than 1/3 of max sentence
நீதிமன்றம் தீர்மானிக்கும், ஆனால் அதிகபட்ச தண்டனையின் 1/3 ஐவிட அதிகமாக இருக்க முடியாது

(C) No jail at all
சிறைதண்டனை கிடையாது

(D) Only 1 month
1 மாதம் மட்டும்

90. If a person is drunk because someone forced him, is he responsible for a crime?
ஒருவர் கட்டாயமாக மதுபானம் அருந்தி குற்றம் செய்தால், அவர் பொறுப்பாக இருக்க வேண்டுமா?

(A) Yes, always
ஆமாம், எப்போதும்

(B) No, if he could not understand his actions
இல்லை, அவர் தான் என்ன செய்கிறார் என்று புரியவில்லையெனில்

(C) Yes, if he drinks daily
ஆமாம், அவர் தினமும் குடிப்பவராக இருந்தால்

(D) Only if victim is injured
பாதிக்கப்பட்டவர் காயம் அடைந்திருந்தால் மட்டும்

91. The law protects acts done for the benefit of a child or mentally ill person if
குழந்தை அல்லது மனநிலை பாதிக்கப்பட்ட நபருக்காக நல்ல நோக்கத்துடன் செய்யப்பட்ட செயல்கள் சட்டம் வழியாக பாதுகாக்கப்படுமா?

(A) Done in good faith
நல்ல நம்பிக்கையுடன் செய்தால்

(B) Done for fun
பொழுதுபோக்கிற்காக செய்தால்

(C) Done without any plan
திட்டமின்றி செய்தால்

(D) Done without telling anyone
யாரிடமும் சொல்லாமல் செய்தால்

92. If a guardian agrees, and the act is done with good intention, will it be considered an offence?
பாதுகாவலர் ஒப்புக்கொடுத்து, நல்ல நோக்கத்தில் ஒரு செயல் செய்தால் அது குற்றமாக கருதப்படுமா?

(A) Yes
ஆமாம்

(B) No
இல்லை

(C) Only in serious cases
பெரும்பாலும் தான்

(D) Only if there is no witness
சாட்சியம் இல்லையெனில் மட்டும்

93. Section 8 deals with
பிரிவு 8 கையாள்வது

(A) Good faith
நல்லெண்ணம்

(B) Court
நீதிமன்றம்

(C) Death
மரணம்

(D) Amount of fine
அபராதத் தொகை

94. Which section deals the act of person of unsound mind?
மனநிலை சரியில்லாத ஒருவரின் செயலைப் பற்றி எந்தப் பிரிவு விவாதிக்கிறது?

(A) 7
(B) 22
(C) 13
(D) 55

95. "Dishonestly" means an act done with the intention of causing:
"நேர்மையற்ற முறையில்" என்பது பின்வருவனவற்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்படும் ஒரு செயலைக் குறிக்கிறது?

(A) Confusion
குழப்பம்

(B) Harm to society
சமூகத்திற்கு தீங்கு

(C) Wrongful gain or wrongful loss
தவறான ஆதாயம் அல்லது தவறான இழப்பு

(D) Emotional distress
உணர்ச்சி ரீதியான துன்பம்

96. Which section deals with the escape from confinement or custody negligently suffered by public servant?
எந்தப் பிரிவு, அரசு ஊழியர் அலட்சியத்தால் சிறைவாசம் அல்லது காவலில் இருந்து தப்பிப்பதைப் பற்றிக் கூறுகிறது?

(A) 261
(B) 257
(C) 239
(D) 155

97. The word 'juryman' which is now obsolete in India has been ____________ in the BNS
இந்தியாவில் இப்போது வழக்கொழிந்து போன 'ஜூரிமேன்' என்ற சொல் BNS இல்

(A) Expanded
விரிவாக்கப்பட்டது

(B) Redefined
மறுவரையறை செய்யப்பட்டது

(C) Retained
தக்கவைக்கப்பட்டது

(D) Removed
அகற்றப்பட்டது

98. What is the right of private defence?
தனிப்பட்ட பாதுகாப்பு உரிமை என்றால் என்ன?

(A) Right to protect self and property
தன்னையும் சொத்துக்களையும் பாதுகாக்கும் உரிமை

(B) Right to attack anyone
யாரையும் தாக்கும் உரிமை

(C) Right to shout in public
பொது இடங்களில் கூச்சலிடும் உரிமை

(D) Right to argue with police
காவல்துறையினருடன் வாக்குவாதம் செய்யும் உரிமை

99. Which section defines abettor?
எந்தப் பிரிவு உடந்தை குற்றவாளியை வரையறுக்கிறது?

(A) 46 (B) 57

(C) 39 (D) 55

100. "Harbour" refers to
"புகலளித்தல்" என்பது பின்வருவனவற்றைக் குறிக்கிறது

(A) Giving financial aid
நிதி உதவி வழங்குதல்

(B) Giving shelter or protection to an offender
குற்றவாளிக்கு தங்குமிடம் அல்லது பாதுகாப்பு வழங்குதல்

(C) Transporting goods
பொருட்களை கொண்டு செல்வது

(D) Helping police in arrest
கைது செய்ய காவல்துறைக்கு உதவுதல்